# ஓஎன்ஜிசி பொதுப்பள்ளி

**இடம் : நிரவி, காரைக்கால்.** **நாள் : 12.07.18**

ஓஎன்ஜிசி பொதுப்பள்ளி வளாகத்தில், ஓஎன்ஜிசி பொதுப்பள்ளியின் ஆறாம் வகுப்பு மாணவ மாணவிகளுக்கான **‘வித்யா ப்ரவேஷ்’** என்னும் உறுதிமொழி மேற்கொள்ளும் விழாவானது 12.07.18 வியாழக்கிழமை அன்று காலை 10.30 மணியளவில், இறைவாழ்த்துடன் இனிதே தொடங்கியது. சிறப்பு விருந்தினராக, நாகப்பட்டினத்தில் உள்ள **சின்மயா வித்யாலயா பள்ளி**யின் முதல்வர் **திருமதி. கீதா பெனட்** அவர்கள் கலந்துகொண்டார். பள்ளியின் **தாளாளர் திரு. கண்ணன்** அவர்கள் விழாவிற்குத் தலைமை தாங்கினார்.





இதனைத் தொடர்ந்து, பள்ளி **முதல்வர், திரு. சுவாமிநாதன்** அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில், ஆசிரியரும் பெற்றோரும் குழந்தைகளின் நலனின் அக்கறை கொண்டு செயல்பட வேண்டும். குழந்தைகள் பள்ளிக்குச் செல்லுதல் மட்டும் போதாது, அவர்களின் எதிர்காலம் நம் கையில் இருப்பதை நாம் மறந்துவிடக் கூடாது என்றார். நாம் கற்றுக் கொடுக்கும் கல்வியானது மன அழுத்தம் இல்லாத இயல்பான நிலையில் அமைய வேண்டும் என்று கூறி அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

சிறப்பு விருந்தினர் தம் சிறப்புரையில், **பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை எவ்வாறு கையாள வேண்டுமென்ற வழிமுறைகளைக் விளக்கினார். குமரப்பருவத்தில் அடியெடுத்து வைக்கும் மாணவர்களின் வளர்ச்சியை நன்கு கவனிப்பதுடன் அவர்களுடைய எதிர்காலம் நாட்டுக்கு நன்மையைத் தரவல்லதாய் அமைக்க, பெற்றோர் உறுதுணையாய் இருக்க வேண்டும் என்றார். மேலும் மாணவர்களுக்கு, கல்வி என்பது மனிதனை, மனிதனாக எடுத்துக்காட்டுவதாக இருக்க வேண்டும். இலச்சியங்களை நன்முறையில் நிறைவேற்ற முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். செய்யும் செயல் வெற்றியை மட்டுமல்ல மகிழ்ச்சியையும் தருவதாக அமையவேண்டும். ஆகவே, மாணவர்கள் தாங்கள் தங்களின் பொறுப்புணர்ந்து நடந்துகொள்ள வேண்டும் என்றும் எடுத்துரைத்தார்.**





**மாணவர்கள் தங்களின் பெற்றோர்களையும், பெரியவர்களை மதித்துப் போற்றுதல் பற்றி உறுதிமொழி எடுத்துக்கொண்டனர். மாணவர்கள் தங்களுடைய பெற்றோர்களின், பாதம் வணங்கி மரியாதை செலுத்தினர்.** அந்நிகழ்வினைப் பெற்றோர்களும் ஏற்றுக் கொண்டு தங்கள் குழந்தைகளுக்கு ஆசிகளை வழங்கினர். இறுதியாக **ஆசிரியை திருமதி. அனிதா நன்றியுரை** கூறினார்.




நிகழ்ச்சி நன்முறையில் நடைபெற பள்ளியின் துணைமுதல்வர் **திரு. எட்வின் சாமுவேல்**, பள்ளியின் **ஏ.ஓ. திரு. காமராஜ்,** நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பாளர் **திருமதி. உமாமகேஷ்வரி** மற்றும் **திருமதி. கல்யாணி, திருமதி. அமுதா, திருமதி. ஷோபனா, திருமதி. அனிதா, திரு. பிரபாகரன், திரு. பிரகாஷ், அலுவலக அன்பர்கள்** ஆகியோர் மிகச் சிறப்பாக செயல்பட்டனர்.